www.Padasalai.Net www.TrbTnpsc.com

ASS

# முழு ஆண்டுத் தேர்வு - 2024 - 25

9 - வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

குறிப்புகள் : I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

1. 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

2. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

3. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

4. பொருத்தமான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) சிறுபஞ்ச மூலம் | - 1. காப்பிய இலக்கியம் | (க) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 |
| ஆ) குடும்ப விளக்கு - | 2. சங்க இலக்கியம் | (உ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4 |
| இ) சீவகசிந்தா மணி | - 3. அற இலக்கியம் | (ங) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 |
| ஈ) குறுந்தொகை - | 4. தற்கால இலக்கியம். | (ச) அ-4, ஆ-1, இ-2, ஈ-3 |

5. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி ____

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

6. தீரா இடும்பைத் தருவது எது? அ. ஆராயாமை, ஐயப்படுதல் ஆ. குணம், குற்றம்

இ. பெருமை, சிறுமை ஈ. நாடாமை , பேணாமை

7. ஐஞ்சிறுங் காப்பியங்களுள் ஒன்று அ) சிலப்பதிகாரம்

ஆ) யசோதர காவியம் இ) மணிமேகலை ஈ) நாலடியார்

8. தமிழ் மொழியில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல் _____

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) புறநானூறு

9. 'ஞானம்' என்பதன் பொருள் யாது? _________

அ. தானம் ஆ. தெளிவு இ. சினம் ஈ. அறிவு

10. இமயத்துக் <u>கோடு</u> உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

11. 'வகுப்பறை சிரித்தது' என்பது _____________ ஆகுபெயராகும் அ) காலவாகு பெயர்

ஆ) பொருளாகு பெயர் இ) இடவாகு பெயர் ஈ) தொழிலாகு பெயர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**பாடலைப் படித்து வினாக்களுக்கு(12,13,14,15) விடையளிக்க:-**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்
அ. பெரியபுராணம் ஆ. யசோதர காவியம் இ. ஒளியின் அழைப்பு ஈ. குடும்ப விளக்கு

13. இப்பாடலின் ஆசிரியர் ___________
அ. லாவோட்சு ஆ. பிச்சமூர்த்தி இ. யார் என அறியப்படவில்லை ஈ. பாரதிதாசன்

14. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக. அ. ஆக்குவது - அறத்தை
ஆ. போக்குவது – நோக்குவது இ. ஏதெனில் – காக்கவே ஈ. நோக்குவது – ஞானம்

15. 'வெகுளி' – என்பதன் பொருள் யாது? அ. நற்செயல் ஆ. அறிவு இ. நன்னெறி ஈ. சினம்

பகுதி – II (மதிப்பெண்கள்: 18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் 'ஒரு சிறு இசை' ஆகும்.
ஆ. சமூக வளர்ச்சிக்கு கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்.

17. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

18. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

19. நடுகல் என்றால் என்ன?

20. கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

21. தரும் – என முடியும் குறளை எழுதுக.

பிரிவு – 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 × 2 = 10

22. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.
அ) சித்திரமும் கைப்பழக்கம் _________ ஆ) கற்றோருக்குச் சென்ற ____________

23. தமிழெண் எழுதுக. அ) 32 ஆ) 61

24. மரபுப் பிழையை நீக்கி எழுதுக
அ) நேற்று தென்றல் காற்று அடித்தது. ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா

25. *பகுபத உறுப்பிலக்கணம் தருக.* : உணர்த்த

26. *கலைச்சொல் தருக.* அ. EXCAVATION ஆ. HERO STONE

27. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

**குறிப்பு:- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (அகல், கால், அலை)**

அ) எனக்கு____ பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன் _____ ஐ வை.
ஆ) கைப்பொருளைக் கடல் _______யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி ______ந்தால் கிடைக்குமா?

28. **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**
அ) _______ பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா) ஆ) ------------ சிறந்தது (சால, மழ)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி - III (மதிப்பெண்கள் -18) பிரிவு - I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2 × 3 = 6

29. பத்தியைப் படித்து பதில் தருக

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ஆவார். இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி, தேவதாசிமுறை ஒழிப்புச்சட்டம், இருதார தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமண தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

அ) சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர் யார்?

ஆ) டாக்டர் முத்துலட்சுமி எந்தெந்த சட்டங்கள் நிறைவேறக் காரணமாக இருந்தார்?

இ). டாக்டர் முத்துலட்சுமி அடையாற்றில் எந்த ஆண்டு அவ்வை இல்லம் நிறுவினார்?

30. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

31. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

## பிரிவு - II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 × 3 = 6

(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.)

32. பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக .

34. அ) " காடெல்லாம் " எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிமாறாமல் எழுதுக (அல்லது)

ஆ) "அள்ளற் பழனத்து " எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடலை எழுதுக.

## பிரிவு - III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2 × 3 = 6

35. வல்லினம் மிகும் இடங்கள் எவையேனும் மூன்றனுக்குச் சான்றுகள் தருக.

36. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அடுக்கிய கோடி பெறினும் குடிபிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி -IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 × 5 = 25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) ' என் சமகாலத் தோழர்களே ' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

39. உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் " கால் முளைத்த கதைகள் " என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக. (அல்லது)

ஆ. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.




Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அ) சமூகத்திற்கு என் பணிகள்

1. குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடுவேன்
2. தண்ணீர் வீணாவதை எங்கு கண்டாலும் தடுப்பேன்.

3.______________________________ 4.______________________________

5.______________________________ 6.______________________________ (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:-

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."

42. இலக்கிய நயம் பாராட்டுக.

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை - கவிஞர். வைரமுத்து

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கானமாற்று வினா பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.

(இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, பேரூர், செந்தாமரை]

மானாமதுரை ஒரு அழகான ......... நீண்டவயல்களும் ................களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் ............பூக்கள் மலர்ந்துள்ளன. கதிரவனின் ........... வீசிட சோலைப் .......களின் ...............கேட்போரைப்..........................அடையச் செய்கிறது.

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3 × 8 = 24

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.
(அல்லது) ஆ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

44. அ 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. (அல்லது)
ஆ 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - கல்வி - பெண் கல்வி - பெண்கல்வியின் பயன்கள் - சமூக மாற்றம் - சாதனை பெண்கள் - முடிவுரை (அல்லது) ஆ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களின் அனுபவங்களை வருணித்து எழுதுக.



Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com